**புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியகம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பணியகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு அதிகார சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு வீச்சு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பணியகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பணியகத்தின சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பணியகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பணியகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பணியகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பின் மீது கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பதில் உள்ளக கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறிப்பிடத்தக்க அதிகாரத்திற்கு அமைய கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின்றன எனவும், பொருந்தக்கூடிய அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பினை அனுமதிப்பதற்கு தேவையான கொடுக்கல்

வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன எனவும், சொத்துக்களுக்கான பொறுப்புக்கூறலினை பேணுகின்றன எனவும், முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறிப்பிடத்தக்க அதிகாரத்திற்கு அமைய மாத்திரம் சொத்துக்களினை அணுகுவதற்கு அனுமதியளிக்கப்படுகிறது எனவும், நியாயமான இடைவெளிகளில் இருக்கின்ற சொத்துக்களுடன் சொத்துக்களுக்காக பதிவு செய்யப்பட்ட பொறுப்புக்கூறல் ஒப்பிடப்படுகின்றது எனவும், ஏதாவது வேறுபாடுகள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டின' “ திட்டமிடு மற்றும் பராமரி” முறைமையொன்று நிறுவனத்திற்கு அவசியமாகும்.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | மீளாய்வாண்டின் போது ரூபா 2,825,607,475 தொகையுடைய 124 நாட்குறிப்பேட்டு பதிவுகள் பதிவுசெய்யப்பட்டுள்ள போதிலும் அதனோடு தொடர்புடைய உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நாட்குறிப்பு பதிவுகளோடு சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத போதிலும் தேவையான சான்றுகள் கோரப்பட்டதற்கு அமைய கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது எனவும், எதிர்கால நாட்குறிப்பு பதிவுக்கு தேவையான சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நாட்குறிப்பு பதிவுகளுடன் தொடர்புடைய பொருத்தமான உறுதிப்படுத்தல் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | பணியகத்தின் கிளை அலுவலகங்களில் ஒப்பந்த அடிப்படையில் கடமை புரிகின்ற 63 உத்தியோகத்தர்கள் தொடர்பில் பணப் பெறுவனவில் கையொப்பமின்றி ரூபா 16,611,156 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டுள்ளது. | அதிகஷ்ட பிரதேசங்களில் புனர்வாழ்வு கடமைக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் பணிக்கமர்த்தப்பட்டனர். அவர்களுடைய சம்பளங்கள் உரிய நேரத்தில் வங்கியில் இடப்படுவதுடன் அவர்களுடைய வேலைத்தளத்திலிருந்து கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள் பின்னர் பட்டியலுடன் இணைக்கப்படு கின்றன. இதன்பிறகு, ஊதியங்களும் கொடுப்பனவுகளும் தொடர்பாக பூர்த்திசெய்யப்பட்ட பொது 35 பெறப்பட்டு, பட்டியலுடன் இணைக்கப்பட் டுள்ளதாக உறுதிப்படுத்துகின்ற கையொப்பங்களினை பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். | பணம் பெறப்பட்டதாக கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டும். |

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 20 இன் 17 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 750,000 தொகையுடைய கணனி மென்பொருளினை அருவச் சொத்தாக காட்டப்பட வேண்டும் என குறிப்பிட்ட போதிலும் இது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 20 இன் பிரகாரம் கணனி மென்பொருளினை அருவச்சொத்தாக தனியாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | 2023 ஜனவரி 01 இல் உள்ளபடியாக செலுத்த வேண்டிய ஆரம்ப மீதியாக ரூபா 43,053,863 தொகை எடுக்கப்பட்டுள்ள போதிலும் அமைச்சின் சிகாஸ் (CIGAS) நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளபடியான பொறுப்புக்கள் ரூபா 23,825,607 இருந்தமையினால் வேறுபாடு ரூபா 19,228,256 அவதானிக்கப்பட்டது. | இந்த கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக சிகாஸ் இல் உள்ளடக்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் பதிவேடு கணக்காய்விற்கு கொடுக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் துல்லியமாக இனங்க ாணப்பட வேண்டும். |
| **(ஆ)** | 2016 திசெம்பர் 30 மற்றும் 2016 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட்ட முறையே ரூபா 3,815,021 மற்றும் ரூபா 3,714,189 ஆகியவற்றின் மொத்தம் ரூபா 7,529,210 தொகையினை முற்பணங்களாக அடையாளப்படுத்துவதற்கு பதிலாக, கந்தக்காடு மற்றும் சேனாபுர புனர்வாழ்வு நிலையத்திற்கு வருகை தரும் வளவாளர்களின் பாவனைக்காக நிர்மாணிக்கப்பட்ட 02 தங்குமிட கட்டிடங்களுக்கான அமைச்சின் நடைமுறை வேலைக் கணக்கின் | கந்தக்காடு மற்றும் சேனாபுர புனர்வாழ்வு நிலையத்திற்கு வருகை தரும் வளவாளர்களின் பாவனைக்காக நிர்மாணிக்கப்பட்ட 02 தங்குமிட கட்டிடங்களுக்கான செலுத்தப்பட்ட முற்பணங்களினை நடைமுறை வேலைக் கணக்கினை முற்பணக்கணக்கிற்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும் | செலுத்தப்பட்ட முற்பணங்கள் தனியாக கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் கணக்கீடு செய்யும் போது நடைமுறை வேலையில் சீராக்கப்பட்டுள்ளது. | என்று குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| **(இ)** | ரூபா 1,375,000 தொகை மதிக்கத்தக்க ஐந்து குளிரூட்டிகளினை ஆதனம், பொறி மற்றும் ஏனைய உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு பதிலாக கணினி மென்பொருளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | ரூபா 1,375,000 தொகை மதிக்கத்தக்க ஐந்து குளிரூட்டிகளினை தவறு காரணமாக கணனிகள் மற்றும் பாகங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. இயந்திரம் மற்றும் ஏனைய உபகரணங்கள் கணக்கில் சரியாக உள்ளிடுவதற்கு நடவடிககைகள் எடுக்கப்படுவதோடு, உரிய சீராக்கங்களும் மேற்கொள்ளப்படும். | சொத்துக்கள் துல்லியமாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| **(ஈ)** | 2023 ஆம் ஆண்டிற்கான பொது சேவை சேமலாப நிதயத்திற்கான பணியகத்தின் பங்களிப்பு ரூபா 2,878,195 தொகையாக இருந்தது. இதனை தனியானதொரு கணக்கிற்கு வரவு வைக்காமல் சம்பளங்கள் மற்றும் கூலிகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. | தனியானதொரு கணக்கிற்கு பொது சேவை சேமலாப நிதயத்திற்கான பணியகத்தின் பங்களிப்பை முறையாக செலவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | பங்களிப்புக்களினை கணக்குகளில் தனியாக காட்டப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்து மூலமான சான்றுகளின் குறைபாடு

| உருப்படி | தொகை ரூபா | கணக்காய்வு சான்று காணப்படாமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நீதி அமைச்சின் கீழ் இருந்த இந்த பணியகம் 2023 ஜனவரி 01 இல் இருந்து சுயாதீன நிறுவனமொன்றாக நிதிக்கூற்றுக்களை தயாரித்துள்ளதனால் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. அதேபோல், 2023 ஜனவரி 01 இல் மூலதன மானியக் கணக்கு மீதிக்கு சீராக்கப்பட்ட நிலையான சொத்துக்களின் | 662,455,363 | சொத்துக்களின் கணிப்பீட்டு வகையினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள். | பணியகத்தின் சொத்துகளினுடைய பெறுமதியாக இருந்த ரூபா 1,534,994,759 தொகையுடைய அகற்றலினையும், மற்றும் சிகாஸ் கணக்கீட்டு முறைமையிலிருந்து அகற்றலாக கருத்திலெடுத்து நீதி அமைச்சின் தலைமையகத்தின் கீழ் உப அலுவலகமாக சிகாஸ் கணக்கீட்டு | சொத்துக்களின் பெறுமதியினை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெறுமதியில் மாற்றத்தின் தேறிய பெறுமதி ரூபா 61,911,543 தொகையாக இருந்தது. 03 சொத்து வகைகளின் பெறுமதியில் அதிகரிப்பு மொத்தம் ரூபா 23,485,930 தொகையும் மற்றும் மற்றைய சொத்து வகைகளின் பெறுமதியில் குறைவு ரூபா 638,969,433 தொகையும் எவ்வாறு கணிப்பீடு செய்யப்பட்டது தொடர்பான பெறுமதி கணிப்பு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | முறைமையில் உள்ளடக்கப்பட்டதும், தொடர்பாக நாட்குறிப்பு பதிவுகள் முலம் மேற்கொள்ளப்பட்டன. |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | ஓய்வூதிய திணைக்களத்தின் 2015 யூலை 23 ஆம் திகதிய 07/2015 ஆம் ஓய்வூதிய சுற்றறிக்கையின் 8 (vii) ஆம் பந்தி | ஒவ்வொரு மாதத்தின் பங்களிப்புக்கள் அடுத்த மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் பொது சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டுமாயினும் செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 02 நாட்கள் முதல் 32 நாட்கள் வரையான காலதாமதத்துடன் தொடர்பான 10 நிகழ்வுகளின் படி ரூபா 1,729,038 தொகை அனுப்பப்பட்டுள்ளது. | போக்குவரத்து வசதிகளினை பெறுவதில் உள்ள சிரமம் தொடர்பில் சேமலாப நிதியத்திற்கு உடனடியாக ஒப்பந்த மற்றும் நிலையான ஊழியர்களின் பங்களிப்புக்களினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், அனுப்புதல்கள் இதன்பிறகு எழுதப்படுவதனால் நிதியத்திற்கு பங்களிப்புக்களினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரசுக்கு சொந்தமான பொதுமுயற்சிகளிற்கான செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களுடன் சேரத்து வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய தயாரிக்கப்பட்ட வருடாந்த அறிக்கையின் வரைவானது மேற்பார்வையின் பின்னர் | குறிப்பிடப்பட்ட கையேட்டின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 2024 மே 22 இல் அரச கணக்காய்வு பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| **(இ)** | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரசுக்கு சொந்தமான பொதுமுயற்சிகளிற்கான செயற்பாட்டு கையேட்டின் 4.4 ஆம் பந்தி | மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வு குழு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டுமாயினும் பணியகம் 2023 திசெம்பர் 13 இல் ஒரு கணக்காய்வு குழு கூட்டத்தினை மாத்திரம் 2023 ஆம் ஆண்டுக்காக நடத்தியிருந்தது. | 2023 இன் 02 ஆம் இலக்க பணியக புனர்வாழ்வு அதிகாரச்சட்டம் 2023 பெப்ரவரி 01 இல் இருந்து இயற்றப்பட்டது. 2023 யூன் 07 இல் பணியத்தின் ஆளும் பேரவையின் முதலாவது கூட்டம் நடத்தப்பட்டது எனவும், கணக்காய்வுக் குழு நியமிக்கப்பட்டது எனவும், 2023 திசெம்பர் 14 இல் 2023 ஆம் ஆண்டின் முதலாவது கணக்காய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது எனவும், இதன்பிறகு தொடர்புடைய வழிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய கணக்காய்வு குழு கூட்டங்கள் நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 66,389,263 தொகையான குறைவொன்று காணப்பட்டது.

## 3 . செயற்பாட்டு விளைவு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | தேசிய உணவு மேம்படுத்தல் சபை, புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகம் மற்றும் தனியார் கம்பனி என்பன 2022 ஒக்தோபர் 04 இல் இருந்து 05 வருடங்களிற்காக கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் புனர்வாழ்வாளர்களின் உழைப்பினை வழங்கி வெலிகந்த குடியிருப்பு வணிக | தொடர்புடைய விவசாய செயற்திட்டத்திற்காக எடுக்கப்பட்ட நிலம் தரிசு நிலமாக இருந்தமையும், நிலத்தினை தயார்படுத்தலுக்கு எடுத்த நேரம் அதிகரித்தமையும், புனர்வாழ்வு நிலையத்தின் | புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவ பரப்பில் சோள பயிரச்செய்கையினை ஆரம்பித்த போதிலும், அதன் அறுவடையினை பெற முடியாமை காரணமாக செயற்திட்டம் நிறுத்தப்பட்டது. | விட்டு விட்டு இருந்த நிலை காரணமாக புனர்வாழ்வாளர்களிடம் இருந்து உழைப்பு பங்களிப்பினை பெறுவதில் தோல்வியும், விதைகளினை பயிருடும் நேரத்தின் போது சேனா புழுக்களின் அச்சுருத்தலும், வன விலங்குகள் மற்றும் காட்டு யானைகளிடமிருந்து பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் மாறாத அச்சுறுத்தல் மற்றும் நிரந்தரமான யானை வேலியின் குறைபாடு தொடர்பான காரணங்களினால் எதிர்பார்த்த இலாபத்தினை பெற முடியாமையும், பணத்தினை செலுத்தி உள்நாட்டு குடியுரிப்பாளின் ஊழியத்தை பெறமுடியாமையும் போன்ற காரணிகளினால் இந்த செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்ட போதிலும் இதனைப்பற்றி பணியகத்தின் ஆளுகை பேரவையிடம் தெரிவிக்கப்படுவதோடு மேலதிக நவடிக்கையும் மேற்கொள்ளப்படும். | |
| **(ஆ)** | விவசாய திணைக்கயத்தினால் மிருகங்களின் உணவிற்காக சோள வளர்ப்பு செயற்திட்டத்திற்கு 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 39,546,017 மற்றும் ரூபா 10,669,110 தொகைகளை உள்ளங்கிய மொத்த ஏற்பாடாக ரூபா 50,215,127 தொகை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இரண்டு ஆண்டுகளின் போது ரூபா 12,989,795 தொகையே மேற்கொள்ளப்பட்டது. இருந்த போதிலும், கணக்ககாய்வு திகதியான 2024 மே 03 வரையிலும் இரு தரப்பினர்களுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2022 திசெம்பர் 02 இல் விவசாய திணைக்களம் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணிகத்தின் என்பவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது 2023 ஏப்ரல் 30 இல் காலாவதியாகியுள்ளதுடன் பணியகம் இதனை நீடித்து பேணுவதற்கு விரும்பவில்லை எனவும், மற்றும் விவசாய அமைச்சுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மற்றும் விவசாய திணைக்களத்தினால் வழங்கப்பட்ட | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பாடுகள் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சோள விதைகளினை நட்டதிலிருந்து கிடைத்த சோள அறுவடை வருமானத்தினை அரச திறைசேரிக்கு செலவு வைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| **(இ)** | பணியகத்தின் ஊழியர் நலன்புரி நிதியத்தினால் நடத்தப்படுகின்ற மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி நிலையமானது (சேனாபுர) புனர்வாளர்களின் உழைப்பு பங்களிப்புடன் சீமெந்து செங்கற்கள் உற்பத்தி மற்றும் நெற் பயிற்செய்கை செயற்திட்டத்தினை நடத்துகிறதுடன், கணக்காய்விற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் 2023 செப்தெம்பர் 14 இல் நெற் பயிற்செய்கை செயற்திட்டத்தின் மூலம் கிடைத்த நெல் விற்பனை வருமானம் ரூபா 1,164,500 தொகையாக இருந்தது. இருந்தபோதிலும், புனர்வாளர்களுக்கு அவர்களுடைய ஊழியப் பங்களிப்புக்காக ஏதாவது பொருளாதார நன்மைகளினை வழங்குவதற்கு என எவ்வித நிகழ்ச்சித் திட்டங்களும் காணப்பட்டிருக்கவில்லை. | சேனாபுர நிலையத்தின் கீழ் நடத்தப்படுகின்ற நெற் பயிற்செய்கை செயற்திட்டமானது பணியக நலன்புரி திட்டத்தினால் நடத்தப்பட்டு வருகின்றது. புனர்வாழ்வாளர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களின் உழைப்பு பங்களிப்பினை பயன்படுத்தி இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும், மீள்நடுவதற்காக ஒரு பகுதி வருமானமும் நலன்புரி நடவடிக்கைகளுக்காக மற்றைய பகுதியும் பயன்படுத்தப்பட்டு வருகிறது எனவும், இச்செயற்திட்டத்திற்காக பொது மக்களின் பணம் பயன்படுத்தப்படாமை காரணமாக இராணுவ கணக்கீட்டு நடைமுறையின் பிரகாரம் கணக்கீடுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது எனவும், இந்த தகவல் கணக்கீட்டில் வெளிப்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | புனர்வாழ்வாளர்களின் ஊழிய பங்களிப்புக்காக பொருளாதார நன்மையினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 பெறுகை முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| உள்நாட்டில் பண்டங்களினை வழங்குவதற்காக விலைமனு கோரும் சகல விலைமனுதாரர்களும் பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்யப்பட வேண்டும். இலலையெனில், வர்த்தமானி அறிவித்தலின் | தெரிவு செய்யப்பட்ட நிறுவனம் பதிவு செய்யப்பட்ட பெறுமதி சேர் வரி சான்றிதழை அல்லது விலக்களிப்பு சான்றிதழை சமர்ப்பிக்கவில்லை என்பதுடன், அவர் செயலிலுள்ள வரி செலுத்துபவரா இல்லையா | வர்த்தமானி அறிவித்தல் மற்றும் பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| பிரகாரம் உள்நாட்டு வரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் நிறுவனத்தின் பெயரில் பெறப்பட்ட சான்றிதழின் பிரதி சான்றுறுதி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அதற்கேற்ப கொலர்களைக் கொண்ட 750 டீ-சேர்ட்களை கொள்வனவு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட முகவர் செயற்படவில்லை. மேலும், பெறுகை வழிகாட்டிகளின் 8.9.1 (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் முறையானதொரு ஒப்பந்த உடன்படிக்கை எழுதப்பட்டு கையொப்பமிட வேண்டியிருந்தது. இந்த கொள்வனவிற்காக ரூபா 858,750 தொகையான செலவு ஏற்பட்ட போதிலும் முறையானதொரு ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. | என்பதனை உறுதிப்படுத்திய பின்னரே வழங்குனருக்கு தொடர்புடைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், இதன்பிறகு தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு மதிப்பீடுகளினை சமர்ப்பிப்பதற்கு முன்னர் சான்றிதழ் பெறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கந்தக்காடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் உள்ள 03 விடுதிகளினை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்களினை வழங்குவதற்கு முன்பாக ஒப்பந்தக்கிரயத்தினை பூர்த்திசெய்து கொள்ள நிதி ஏற்பாடு காணப்படுவதனை நிச்சயிப்பதற்கும், மற்றும் பெறுகை வழிகாட்டிகளின் 4.1.1 இன் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படுவதனை நிச்சயிப்பதற்கும் ஒட்டுமொத்த பெறுகை செயன்முறையானது திட்டமிடப்பட வேண்டுமாயினும், அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேலும், இந்த நிர்மாண செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 60 சதவீதத்திற்கு மேல் | இந்த பணியகத்திற்குரிய நிர்ாணத்திற்காக வேண்டப்படுகின்ற நிதிகளினை ஒதுக்கீடு செய்வதில் உள்ள தாமதம் காரணமாகவும், கொரோனா வைரஸ் தாக்கத்தினால் கைதிகள் பாதிக்கப்பட்டதும் மற்றும் வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு வரும் இலங்கை பிரஜைகளை தனிமைப்படுத்துவதற்கு நிலையத்தினை பயன்படுத்தியதாலும் தொடர்புடைய செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு சாத்தியமற்றதாக இருந்தது என்றும், தொடர்புடைய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் ஒப்பந்த விலையின் 20 சதவீதத்தினை விஞ்சாத விலை வேறுபாடு வழங்கப்பட வேண்டுமாயினும் பெறுகை | அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் பெறுகை வழிகாட்டிகள் என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உள்ளதனால் கட்டம் I ஆம் மற்றும் கட்டம் II ஆம் ஒப்பந்தங்களினை முடிவுறுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் இதுவரை ஏற்பட்ட மொத்த தொகையான ரூபா 35,066,985 பயனற்றதாக இருந்தது. அதேபோன்று, அமைச்சரவையின் AMA/21/2084/306/094 ஆம் இலக்க தீர்மானத்திற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3.2 இற்கு முரணாக ஒப்பந்த பெறுமதியை விஞ்சி முறையே கட்டம் I ஆம் மற்றும் கட்டம் II ஆம் ஒப்பந்தத்திற்காக 22 சதவீதம் மற்றும் 30 சதவீதத்திற்கு சமனான முறையே ரூபா 8,523,646 மற்றும் ரூபா 5,382,818 விலை வேறுபாடு அனுமதிக்கப்பட்டுள்ளது. | குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட செயற்திட்டத்திற்காக முறையே 22.41 சதவீத மற்றும் 30.32 சதவீத விலை வேறுபாடு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 யூன் 27 ஆம் திகதிய DMS/1869 ஆம் கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டதற்கு அமைய 13 நிரந்தர ஊழியர்களினையும், ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட மற்றும் தற்போது பணியகத்தில் வேலை செய்கின்ற 61 ஊழியர்களினையும் புனர்வாழ்வு பணியகத்தின் பணியாளராக உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கபட்டதுடன், பணியகத்தின் கடமைகளுக்காக ஆயுதப்படைகளின் தரங்களில் உள்ள 55 நபரும் மற்றும் 537 ஏனைய உத்தியோகத்தர்களும் உள்ளடங்கிய மொத்தமாக 592 நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். | 2024 மே 14 ஆம் திகதிய கடிதத்தின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் புனர்வாழ்வு பணியகத்தின் கீழ் நிரந்தர நியமனங்கள் தொடர்பில் பணியாளர்களினை உள்ளீர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், 2024 மே 15 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் உள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களிடமிருந்து எஞ்சிய வெற்றிடங்களுக்கான அங்கீகாரத்தினை பெற்ற பின்னர் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்படும் வரை தொடர்புடைய ஊழியர் தேவைப்பாடு இராணுவ | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள ஊழியர்கினை உள்ளீர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

ஊழியர்களினால் ஈடுசெய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4. பொறுப்புக்கூறல் மற்றும் நல்லாளுகை**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | 2023 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட கல்விச் சுற்றுலாக்களின் இரு செயற்பாடுகள் மற்றும் புனர்வாழ்விற்கு பின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தல் என்பன அமுல்படுத்தப்படவில்லை. | கடந்த காலங்களில் புனர்வாழ்வு நிலையங்களில் இடம்பெற்ற குழு தப்பித்து சென்றமை மற்றும் வன்முறை நடவடிக்கைகள் போன்றவற்றால் அவர்களை வெளியே எடுக்கும் போது காணப்படும் ஆபத்து காரணமாக அந்த விஜயங்கள் மேற்கொள்ளப்படவில்லை. 2024 ஆம் ஆண்டில் கல்வி சுற்றுலா ஒன்று நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். |
| **(ஆ)** | 2023 இன் 02 ஆம் இலக்க பணியக புனர்வாழ்வு அதிகாரச் சட்டத்தின் 4(ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வினை எதிர்பார்ப்பவர்களுக்கு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு ஏற்பாடு செய்தல் என்று பணியகத்தின் செயற்பாடு மற்றும் பணி உள்ளடக்குகின்ற போதிலும் 2023 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கி அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நீதிமன்ற கட்டளைகளின் பிரகாரம் புனர்வாழ்வு பயனாளிகளுக்காக தற்போது புனர்வாழ்வு நிலையங்கள் மாத்திரமே செயற்பட்டு வருகின்றது. தாமாக புனர்வாழ்வினை எதிர்பார்க்கும் புனர்வாழ்வாளர்களுக்காக புதியதொரு புனர்வாழ்வு நிலையத்தினை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், அந்த புனர்வாழ்வாளர்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்களை அமைத்து பரிந்துரைகளினை பெறுவதற்கு தேசிய ஔடதங்கள் கட்டுப்பாடு சபைக்கு குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் பணிகள் என்பன செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கி அமுல்படுத்தப்பட வேண்டும். |